# பதவி வெற்றிடங்கள்

## கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

# சமூக சேவைகள் திணைக்களம்

## பேச்சுச் சிகிச்சையாளர் ( தரம் iii )

சமூக சேவைகள் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் பேச்சுச் சிகிச்சையாளர் பதவி 01 தொடர்பில் பொருத்தமான உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை, பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 2 வது மாடி, II வது கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு **2026.08.28..** ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அஞ்சல் மூலம் அல்லது நேரில் வழங்குதல் வேண்டும். விண்ணப்பத்தினை வைத்து அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பேச்சுச் சிகிச்சையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பம் மற்றும் விபரங்களினை, www.socialservices.gov.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்கள் பின்வரும் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**1. திறந்த ஆட்சேர்ப்பு**

**1.1 வயது வரையறை** ;-

விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்கும் இறுதித் தினத்தன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.2 கல்வித் தகைமைகள் ;-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பேச்சுச் சிகிச்சை தொடர்பிலான பட்டமொன்று அல்லது பேச்சுச் சிகிச்சை தொடர்பில் 02 வருடங்களுக்குக் குறையாத முழுநேர டிப்ளோமாப் பாடநெறியினைப் பெற்றிருத்தல்.

1.3 **உடற் தகுதிகள்** :-

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 பிற : -

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும் விண்ணப்பங்களினைக் கோரும் அறிவித்திலில் குறிப்பிடப்படும் தினத்தன்று சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.5 ஆட்சேர்ப்புத் திட்டம் :-

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியெய்திய தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து, எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் அமைந்த திறன் ஒழுங்கு வரிசையின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையிலான நபர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.6 எழுத்து மூலப் பரீட்சை :-

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | நேரம் 1 மணி | 100% | 40% |
| பொது அறிவு | நேரம் 1 மணி | 100% | 40% |

1.7 **பொதுவான நேர்முகப் பரீட்சை** :-

பதவிக்கான தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரிட்சிப்பதற்குச் சான்றிதழ்களினைச் சரிபார்த்தல் (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது)

1.8 சம்பள அளவுத் திட்டம் :-

1.8.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN -6 - 2025

1.8.2 சம்பள அளவு : ரூ.54,120-10x800-11x1190-10x1320-10x1350-101,910/-

(இச் சம்பள அளவு 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.)

1.9 **சேவை நிபந்தனைகள்** :-

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டதாகும்.. மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினூடாக அவ்வப்போது விதிக்கப்படும் முறைமைக்கு தங்களினால் அது தொடர்பிலான பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும்.

2.0 குறிப்பு :-

மேலே குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.

**தர்சனி கருணாரத்ன,**
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 வது மாடி,
II வது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.